# இன்னா நாற்பது

முக்கட் பகவ னடிதொழா தார்க்கின்னா;
பொற்பன வூர்தியை யுள்ளா தொழுகின்னா;
சக்கரத் தானை மறப்பின்னா(து); ஆங்கின்னா
சத்தியான் றடொழா தார்க்கு.

(ப-ரை.) முக்கண் பகவன் - மூன்று கண்களையுடைய பகவனாகிய சிவபிரானுடைய, அடி-திருவடிகளை, தொழார்க்கு - வணங்காதவர்களுக்கு, இன்னா - துன்பமுண்டாம்; பொற்பு-அழகாகிய, அன ஊர்தியை - அன்னமாகிய வாகனத்தையுடையவராகிய பிரமாவை, உள்ளாது-நினையாமல், ஒழுகு-நடத்தை, இன்னா-துன்பமாகும்; சக்கரத்தானை-(வலக்கையிற்) சக்கரத்தை யேந்திய திருமாலை, மறப்பு-மறத்தல், இன்னா-துன்பமாகும்; ஆங்கு-அவ்வாறே, சத்தியான்-வேற்படையையுடைய குமாரக்கடவுளினுடைய, தாள் - திருவடிகளை, தொழாதார்க்கு-வணங்காதவர்களுக்கு, இன்னா-துன்பமுண்டாகும்.

பந்தமில் லாத மனையின் வனப்பின்னா;
தந்தையில் லாத புதல்வ னழகின்னா;
அந்தண ரில்லிருந் தூணின்னா(து); ஆங்கின்னா
மந்திரம் வாயா விடின். 1

(ப-ரை.) பந்தம் இல்லாத - சுற்றத்தவர்கள் இல்லாத, மனையின்-வீட்டினது, வனப்பு-அழகானது, இன்னா-துன்பமானதாகும்; தந்தை இல்லாத - , புதல்வன்-பிள்ளையினது, அழகு-அழகானது, இன்னா - துன்பமானதாகும்; அந்தணர் - பார்ப்பார்களுடைய, இல் இருந்து-வீட்டிலிருந்து, ஊண் - உண்ணுதல், இன்னா - துன்பமானதாகும்; ஆங்கு-அவ்வாறே, மந்திரம்-ஆலோசனை, வாயாவிடின் - (தக்கபடி) தோன்றாமற் போகுமானால், (அங்ஙனம் தோன்றாமற் போதல்) இன்னா - துன்பமானதாகும்.

பார்ப்பாரிற் கோழியு நாயும் புகலின்னா;
ஆர்த்த மனைவி யடங்காமை நன்கின்னா;
பாத்தில் புடவை யுடையின்னா(து); ஆங்கின்னா
காப்பாற்றா வேந்த னுலகு. 2

(ப-ரை.) பார்ப்பார்-பார்ப்பாருடைய, இல் - வீடுகளில், கோழியும் நாயும்-, புகல்-நுழைதல், இன்னா-துன்பந்தருவதாகும்; ஆர்த்த-(தனக்கு வாழ்க்கைத் துணைவியாகக்) கலியாணஞ் செய்துகொண்ட, மனைவி-மனைவியாள், அடங்காமை-(கொழுநனுக்கு) அடங்கி நடவாமை, நன்கு இன்னா - மிகவுந் துன்பந் தருவதாகும்; பாத்து இல் - (மாறி மாறிக் கட்டுதற்கு வேறு புடவையின்) துணையில்லாத, புடவை - (ஒரு) புடவையை, உடை-உடுத்தல், இன்னா - துன்பந்தருவதாகும்; ஆங்கு-அவ்வாறே, காப்பாற்றா-(குடிகளைக்) காவாத, வேந்தன்-அரசனுடைய, உலகு-நாடு, இன்னா-துன்பந்தருவதாகும்.

கொடுங்கோன் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா;
நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா;
கடுமொழி யாளர் தொடர்பின்னா; இன்னா
தடுமாறி வாழ்த லுயிர்க்கு. 3

(ப-ரை.) கொடுங்கோல்-கொடுமையாகிய ஆளுகையையுடைய, மறம்-பாவத்தொழிலைச் செய்யும், மன்னர் கீழ் - அரசர் கீழிருந்து, வாழ்தல்-வாழ்வது, இன்னா-துன்பந் தருவதாகும்; நெடு நீர் - மிக்க நீரில், புணை இன்றி - தெப்பமில்லாமல், நீந்துதல் -, இன்னா-துன்பந் தருவதாகும்; கடுமொழியாளர்-வன்சொற்களைப் பேசுவோருடைய, தொடர்பு - நட்பு, இன்னா - துன்பந் தருவதாகும்; உயிர்க்கு - உயிர்களுக்கு, தடுமாறி - மனத்தடுமாற்றமடைந்து, வாழ்தல் - வாழ்வது, இன்னா-துன்பந்தருவதாகும்.

எருதி லுழவர்க்குப் போகீர மின்னா;
கருவிகண் மாறிப் புறங்கொடுத்த லின்னா;
திருவுடையாரைச் செறலின்னா; இன்னா
பெருவலியார்க் கின்னா செயல். 4

(ப-ரை.) எருது இல்-(உழவுக்குரிய) மாடு இல்லாத, உழவர்க்கு-உழவுத்தொழில் செய்வோர்க்கு, போகு ஈரம்-பருவங்கழிந்த (மழை) நீர், இன்னா-துன்பந் தருவதாகும்; கருவிகள்-(கையிற்பற்றிய ஆயுதங்கள், மாறி - (நமது தொழிலினின்று) மாறும்படி, புறம்கொடுத்தல் - (பகைவருக்கு) முதுகைக் காட்டுதல், இன்னா - துன்பந்தருவதாகும்;

திரு உடையாரை - (மிக்க) செல்வமுடையவர்களை, செறல்-கோபித்தல், இன்னா-துன்பந்தருவதாகும்; பெருவலியார்க்கு-மிக்க வன்மையையுடையவர்களுக்கு, இன்னா செயல் - துன்புத்தை உண்டாக்கல், இன்னா-துன்பந்தருவதாகும்.

**சிறையில் கரும்பினைக் காத்தோம்ப லின்னா ;**
**புரைசேர் பழங்கூரை சேர்ந்தொழுக லின்னா ;**
**முறையின்றி யாளு மரசின்னா ; இன்னா**
**மறையின்றிச் செய்யும் வினை. 5**

(ப-ரை.) சிறை இல்-(வேலியாகிய) காவல் இல்லாத,கரும்பினை-கரும்புப்பயிரை, காத்து ஓம்பல்-பாதுகாத்தல், இன்னா-துன்பந்தருவதாகும்; புரை சேர்-(பல) துவாரங்கள் பொருந்திய, பழங்கூரை-பழைமையாகிய கூரைவீட்டில், சேர்ந்து-பொருந்தி, ஒழுகல் - வாழ்தல், இன்னா-துன்பந்தருவதாகும்; முறை இன்றி - நீதி இல்லாமல், ஆளும்-ஆளுகின்ற, அரசு-அரசாட்சி, இன்னா-துன்பந்தருவதாகும் ; மறை இன்றி-இரகசியம் இல்லாமல், செய்யும் வினை - செய்கின்ற காரியங்கள், இன்னா-துன்பந்தருவதாகும்.

**அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னா ;**
**மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுக லின்னா ;**
**இடும்பை யுடையார் கொடையின்னா ; இன்னா**
**கொடும்பா டுடையார்வாய்ச் சொல். 6**

(ப-ரை.) அறம் மனத்தார்-தருமவழியிற் பொருந்திய மனத்தையுடையவாகர், கூறும் - சொல்லுகின்ற, கடுமொழியும் - கொடுஞ்சொல்லும், இன்னா-துன்பந்தருவதாகும்; மறம் மனத்தார்-வீரத்தன்மையையுடைய மனமுடையவர்கள், ஞாட்பில் - போர்க்களத்தில், மருந்து ஒழுகல் - சோம்பி இருத்தல், இன்னா-துன்பந்தருவதாகும்; இடும்பை உடையார்-வறுமை உடையவர்களுடைய, கொடை-ஈகை, இன்னா-துன்பந்தருவதாகும்; கொடும்பாடு-கொடுமையை,உடையார்-உடையவர்களுடைய, வாய்ச்சொல்-வாய்ச்சொற்கள், இன்னா-துன்பந்தருவனவாகும்.

**ஆற்ற லிலாதான் பிடித்த படையின்னா ;**
**நாற்ற மிலாத மலரி னழகின்னா ;**
**தேற்ற மிலாதான் றுணிபின்னா ; ஆங்கின்னா ;**
**மாற்ற மறியா னுரை. 7**

(ப-ரை) ஆற்றல் - (பகைவர்மீது செலுத்துதற்குரிய) வல்லமை, இலாதான்-இல்லாதவன், பிடித்த-(கையிற்) பற்றிய, படை-ஆயுதம், இன்னா - துன்பந்தருவதாகும்; நாற்றம்-வாசனை, இலாத-இல்லாத, மலரின் அழகு-பூவினுடைய அழகு, இன்னா - துன்பந்தருவதாகும்; தேற்றம் இலாதான் - தெளிவில்லாதவன், துணிபு - (ஒரு காரியத்தைச் செய்யத்) துணிதல், இன்னா - துன்பந்தருவதாகும்; மாற்றம்-பேசுதற்குரிய முறைமையை, அறியான் - அறியாதவனுடைய, உரை-சொற்கள், இன்னா-துன்பந்தருவனவாகும்.

**பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மை யின்னா;**
**நகையாய நண்பினார் நாரின்மை யின்னா;**
**இகலி னெழுந்தவ ரோட்டின்னா; இன்னா**
**நயமின் மனத்தவர் நட்பு.** 8

(ப-ரை.) பகல்போலும் - பகற்பொழுதைப் போன்ற, நெஞ்சத்தார்-கபடமற்ற மனமுடையவர்கள், பண்பு இன்மை - (நல்ல) குணம் இல்லாதவர்களாயிருத்தல், இன்னா - துன்பந்தருவதாகும்- நகைஆய-நகுதல்பொருந்திய, நண்பினார்-நண்பர்கள், நார் இன்மை- (மனத்தில்) அன்பில்லாதவர்களா யிருத்தல், இன்னா-துன்பந்தருவதாகும்; இகலின்-போர் செய்தற்பொருட்டு, எழுந்தவர்-புறப்பட்டுச் சென்றோர், ஓட்டு - (பகைவர்க்குப் புறங்காட்டி) ஓடுதல், இன்னா-துன்பந்தருவதாகும்; நயம் இல் - நன்மை இல்லாத, மனத்தவர் - மனத்தை உடையவர்களுடைய, நட்பு-சினேகம், இன்னா-துன்பந்தருவதாகும்.

**கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னா;**
**வள்ளல்க ளின்மை பரிசிலர்க்கு முன்னின்னா;**
**வண்மை யிலாளர் வனப்பின்னா; ஆங்கின்னா**
**பண்ணில் புரவி பரிப்பு.** 9

(ப-ரை.) களிகட்கு-குடியர்களுக்கு, கள் இல்லா-கள் இல்லாத, மூதூர்-பழைமையாகிய ஊர், நன்கு இன்னா - மிகவுந் துன்பந்தருவதாகும்; வள்ளல்கள்-ஈகைக்குணமுடையோர், இன்மை-இல்லாதிருத்தல், பரிசிலர்க்கு - (பரிசில் பெறும்) இரவலர்க்கு, முன் இன்னா - மிகவுந் துன்பந்தருவதாகும்; வண்மை இலாளர்-ஈகைக்குணமில்லாதவர்களுடைய, வனப்பு-அழகு, இன்னா-துன்பந்தருவதாகும்; ஆங்கு-அவ்வாறே, பண் இல் - கல்லணையில்லாத, புரவி-குதிரை, பரிப்பு - (தன்மீது மனிதரைத்) தாங்குதல், இன்னா-துன்பந்தருவதாகும்.

பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா;
இருள்கூர் சிறுநெறி தாந்தனிப்போக் கின்னா ;
அருளில்லார் தங்கட் செலவின்னா ; இன்னா
பொருளில்லார் வண்மை புரிவு. 10

(ப-ரை.) பொருள் உணர்வார் - (பாட்டின்) பொருளை அறியும் அறிவுடையவர்கள், இல்வழி-இல்லாத இடத்தில், பாட்டு உரைத்தல்-பாட்டைச் சொல்லுதல், இன்னா-துன்பந்தருவதாகும்; இருள் கூர்-இருள் மிகுந்த, சிறு நெறி - சிறிய வழியிலே, தனிப்போக்கு - தனியாகப் போகுதல், இன்னா - துன்பந்தருவதாகும் ; அருள் இல்லார் தங்கண் - கருணை இல்லாதவர்களிடத்தில், செலவு - (இரப்போர்) செல்லுதல், இன்னா - துன்பந்தருவதாகும் ; பொருள் இல்லார் - பொருள் இல்லாதவர்கள், வண்மை புரிவு - (எளியவர்களுக்கு) ஈதலை விரும்புதல், இன்னா-துன்பந்தருவதாகும்.

உடம்பா டிலாத மனைவிசொல் இன்னா ;
இடனில் சிறியாரோ டியாத்தநண் பின்னா ;
விடங்களி யாளர் தொடர்பின்னா ; இன்னா
கடனுடையார் காணப் புகல். 11

(ப-ரை.) உடம்பாடு-(தன் கருத்துக்கு) இசைதல், இலாத-இல்லாத, மனைவி-மனைவியினுடைய, சொல்—, இன்னா-துன்பந்தருவதாகும்; இடன் இல்-(அறிவின்) விரிவு இல்லாத, சிறியாரோடு-சிற்றறிவினரோடு, யாத்த-கொண்ட, நண்பு-சினேகம், இன்னா - துன்பந்தருவதாகும்; விடம்-விஷத்தைப்போன்ற, களிஆளர் - கட்குடித்துக் களித்தலையுடையவர்களுடைய, தொடர்பு-சேர்க்கை, இன்னா-துன்பந்தருவதாகும்; கடன் உடையார் - கடன் கொடுத்தவர்கள், காண-பார்க்கும்படி, புகல் - கடன்பட்டோர் அவர்களுக்கெதிரே செல்லுதல், இன்னா-துன்பந்தருவதாகும்.

தலைதண்ட மாகச் சுரம்போத லின்னா ;
வலைசுமந் துண்பான் பெருமித மின்னா ;
புலையுள்ளி வாழ்த லுயிர்க்கின்னா ; இன்னா
விலைமகளிர் காணும் விழைவு. 12

(ப-ரை.) தலை தண்டம் ஆக - (வழிபறிக்காரரால்) தலை அறுபடும்படி, சுரம் போதல் - பாலைநிலத்திற் செல்லுதல், இன்னா-துன்பந்தருவதாகும்; வலை சுமந்து-வலையைச் சுமந்து எடுத்துக்கொண்டு,

உண்பான்-(அதனால் உயிர்களைப் பற்றி) உண்கின்றவனுடைய, பெருமிதம்-செருக்கு, இன்னா-துன்பந்தருவதாகும்; புலை-புலால் உண்ணுதலை, உள்ளி-விரும்பி, வாழ்தல்-வாழ்வது, உயிர்க்கு - உயிர்களுக்கு, இன்னா - துன்பந்தருவதாகும் ; விலைமகளிர்காணும் - வேசிகளைக் காண்பதற்கு, விழைவு-விரும்புதல், இன்னா-துன்பந்தருவதாகும்.

**மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்த லின்னா ;**
**துணிவில்லார் சொல்லுந் தறுகண்மை யின்னா ;**
**பணியாத மன்னர்ப் பணிவின்னா ; இன்னா**
**பிணியன்னார் வாழு மனை. 13**

(ப-ரை.) வேந்து-அரசன், மணி இலா - (ஓசையினால் தன் வருகையைப் பிறர்க்கு அறிவிக்கும்) மணியை அணியப்பெறாத, குஞ்சரம்-யானையை, ஊர்தல்-ஏறிச்செலுத்துதல், இன்னா - துன்பந்தருவதாகும்; துணிவு இல்லார் - (மனத்)துணிவு இல்லாதவர்கள், சொல்லும்-சொல்லுகின்ற, தறுகண்மை-(பிறர்க்குக் காட்டும்) வீரச்சொற்கள், இன்னா-துன்பந்தருவனவாகும் ; பணியாத - (தம் பகைவர்க்கு எப்பொழுதும்) வணங்குதலில்லாத, மன்னர் - அரசர்களுடைய, பணிவு-வணக்கம், இன்னா-(அவ்வரசர்களின் பகைவர்களுக்குத்)துன்பந்தருவதாகும்; பிணி அன்னார் - (தங்கணவர் முதலாயினார்க்கு) நோயைப்போலத் துன்பமுண்டாக்கும் மகளிற், வாழும்-வாழ்கின்ற, மனை-வீடானது, இன்னா-துன்பந்தருவதாகும்.

**வணரொளி யைம்பாலார் வஞ்சித்த லின்னா ;**
**துணர்தூங்கு மாவின் படுபழ மின்னா;**
**மணப்பூங் குழலார் பிரிவின்னா ; இன்னா**
**வுணர்வா ருணராக் கடை. 14**

(ப-ரை.) வணர்-குழற்சியையும், ஒளி - ஒளியினையும் உடைய, ஐம்பாலார் - ஐந்துவகையாக அமைக்கப்படுவதாகிய கூந்தலையுடைய மாதர்கள், வஞ்சித்தல்-(தங்கள் கொழுநர்களை) வஞ்சித்தல், இன்னா-துன்பந்தருவதாகும்; துணர் - (காய்களும், பழங்களும்) கொத்தாக, தூங்கும்-தொங்குகின்ற, மாவின் - மாமரத்திலிருந்து, படு - கீழே விழுந்த, பழம் - பழமானது, இன்னா - துன்பந்தருவதாகும் ; மணப்பூங்குழலார் - வாசனைபொருந்திய கூந்தலையுடைய மாதர்களுடைய, பிரிவு-பிரிவானது, இன்னா-துன்பந்தருவதாகும்; உணர்வார்-(எதையும் எளிதில்) உணரவல்லவர்கள், உணராக்கடை - (ஒருவர் சொன்னதை) உணராவிடின், இன்னா-(அது) துன்பந்தருவதாகும்.

புல்லார் புரவி மணியின்றி யூர்வின்னா ;
கல்லா ருரைக்குங் கருமப் பொருளின்னா ;
இல்லாதார் நல்ல விருப்பின்னா ; ஆங்கின்னா ;
பல்லாரு ணாணப் படல். 15

(ப-ரை.) புல்-புல்லை, ஆர்-உண்கின்ற, புரவி-குதிரையை, மணி இன்றி-மணி இல்லாமல், ஊர்வு - ஏறிச்செலுத்துதல், இன்னா-துன்பந் தருவதாகும்; கல்லார்-(கற்பன)கற்றுணராதவர்கள், உரைக்கும்-சொல்லுகின்ற, கருமப்பொருள்-காரியத்தின் பயன், இன்னா-துன்பந் தருவதாகும்; இல்லாதார் - செல்வ மில்லாதவர்கள், நல்ல-சிறந்த பொருள்களை, விரும்பு-விரும்புதல், இன்னா-துன்பந் தருவதாகும்; ஆங்கு-அவ்வாறே, பல்லார்உள்-பலர்க்கு நடுவில், நாணப்படல்-(கற்றார் ஒன்றைப்பற்றி பேச) வெட்கப்படுதல், இன்னா - துன்பந்தருவதாகும்.

உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா;
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா ;
கண்ணி லொருவன் வனப்பின்னா ; ஆங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு. 16

(ப-ரை.) உண்ணாது-அநுபவியாமல், பெரும் பொருள்-பெரும் பொருளை, வைக்கும்-(சேர்த்து)வைக்கின்ற,வைப்பு-வைத்தலானது, இன்னா-துன்பந்தருவதாகும்; நண்ணா-(மனம்)பொருந்தாத,பகைவர்-பகைவர்களுடைய,புணர்ச்சி-சேர்க்கை,நனி-மிகவும்,இன்னா-துன்பந் தருவதாகும்; கண் இல் - கண்கள் இல்லாத, ஒருவன் - ஒரு மனிதனுடைய, வனப்பு - அழகு, இன்னா - துன்பந் தருவதாகும்; ஆங்கு; அவ்வாறே, எண் இலான் - ஆலோசனை இல்லாதவன், செய்யும் கணக்கு - செய்கின்ற காரியமானது, இன்னா - துன்பந்தருவதாகும்.

ஆன்றவிந்த சான்றோருட் பேதை புகலின்னா ;
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா ;
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா; ஆங்கின்னா
ஈன்றாளை யோம்பா விடல். 17

(ப-ரை.) ஆன்று - (கல்வி கேள்விகளில்)சிறந்து, அவிந்த-மனம் அடங்கிய, சான்றோர்உள்-பெரியோர்களுக்கு இடையில், பேதை-அறிவில்லாதவன், புகல்-சொல்லுதல், இன்னா-துன்பந்தருவதாகும்; மான்று-(பார்ப்போர்)மயங்கும்படி, இருண்ட போழ்தின் - இருண்டுள்ள காலத்தில், வழங்கல் - (வழியில்) நடத்தல், பெரிது இன்னா-

மிகவும் துன்பந்தருவதாகும்; நோன்று-(துன்பங்களைப்) பொறுத்து, அவிந்து - (மனம்) அடங்கி, வாழாதார் - வாழமாட்டாதவர்கள், நோன்பு-நோற்றல், இன்னு-துன்பந்தருவதாகும்; ஆங்கு-அவ்வாறே, ஈன்றுளை - பெற்ற தாயை, ஓம்பா - காப்பாற்றுமல், விடல் - விட்டு விடுதல், இன்னு-துன்பந்தருவதாகும்.

**உர னுடையா னுள்ள மடிந்திருத்த லின்னு ;**
**மற னுடை யாளுடையான் மார்பார்த்த லின்னு ;**
**சுரமரிய கானஞ் செலவின்னு ; இன்னு**
**மனம்வறி யாளர் தொடர்பு.** 18

(ப-ரை-.) உரன் உடையான் - அறிவுடையவன், உள்ளம் - மனத்தின்கண், மடிந்து இருத்தல் - சோம்பி இருத்தல், இன்னு-துன்பந்தருவதாகும்; மறன் உடை-வீரத்தை உடைய, ஆள் உடையான்-ஆட்களை உடையவன், மார்பு ஆர்த்தல்-(தானே போர்செய்ய)மார்பைத் தட்டுதல், இன்னு-துன்பந்தருவதாகும்; அரிய-(சொல்லுதற்கு)அரிய, சுரம் - பாலைநிலத்திலும், கானம் - காட்டிலும், செலவு - செல்லுதல், இன்னு - துன்பந்தருவதாகும் ; மனம் - மனத்தின்கண், வறியாளர்-(செல்வம்போன்ற உயர்ந்த எண்ணங்கள் இன்றி) வறுமையைப்போன்ற அற்ப எண்ணங்களை யுடையவர்களுடைய, தொடர்பு-சேர்க்கை, இன்னு-துன்பந்தருவதாகும்.

**குலத்துப் பிறந்தவன் கல்லாமை யின்னு ;**
**நிலத்திட்ட நல்வித்து நாருமை யின்னு ;**
**நலத்தகையார் நாணுமை யின்னு ; ஆங்கின்னு**
**கலத்தல் குலமில் வழி.** 19

ப-ரை.) குலத்துப் பிறந்தவன் - (நல்ல) குடியிற் பிறந்தவன், கல்லாமை - படியாமல் இருத்தல், இன்னு - துன்பந்தருவதாகும்; நிலத்து இட்ட-பூமியில் விதைத்த, நல்வித்து-நல்ல விதைகள், நாருமை-முளையாமற்போதல், இன்னு - துன்பந் தருவதாகும்; நலம் தகையார் - நன்மையைச் செய்யும் அறநெறியில் ஒழுகும்தன்மையையுடையவர்கள், நாணுமை - (தகாதன செய்தலில்) நாணங்கொள்ளாமை, இன்னு - துன்பந்தருவதாகும் ; ஆங்கு - அவ்வாறே, குலம் இல் வழி-நற்குடிப் பிறப்பில்லாத வழியிலே, கலத்தல்-சேர்தல், இன்னு-துன்பந் தருவதாகும்.

மாரிநாட் கூவுங் குயிலின் குரலின்னா ;
வீரமி லாளர் கடுமொழிக் கூற்றின்னா ;
மாரி வளம்பொய்ப்பி னூர்க்கின்னா ; ஆங்கின்னா
மூரி யெருத்தா லுழவு. 20

(ப-ரை.) மாரிநாள் - மழைகாலத்தில், கூவும்-கூவுகின்ற, குயிலின் குரல்-குயிலினது குரலோசை, இன்னா-துன்பந்தருவதாகும்; ஈரம் இலாளர்- அன்பில்லாதவர்களுடைய, கடுமொழி-கடுமையாகிய சொற்களின், கூற்று-கூறுபாடுகள், இன்னா-துன்பந்தருவன வாகும்; மாரி-மேகமானது, வளம் பொய்ப்பின் - (தான் மழையைச் சொரிதலாகிய) வளத்தில் பொய்த்துப்போகுமானால், ஊர்க்கு-ஊரிலுள்ள பிராணிகளுக்கு, இன்னா-துன்பமுண்டாகும்; ஆங்கு - அவ்வாறே, மூரி எருத்தால் - (வயது)முதிர்ச்சியையுடைய எருதைக்கொண்டு, உழவு - (நிலத்தை) உழுதல், இன்னா - துன்பந்தருவதாகும்.

ஈத்த வகையா லுவவாதார்க் கீப்பின்னா ;
பாத்துண வில்லா ருழைச்சென் றுணவின்னா ;
மூத்த விடத்துப் பிணியின்னா ; ஆங்கின்னா
வோத்திலாப் பார்ப்பா னுரை. 21

(ப-ரை.) ஈத்த வகையால்-கொடுத்த அளவினால், உவவாதார்க்கு--களிக்காதவர்களுக்கு, ஈப்பு - கொடுத்தல், இன்னா -துன்பந்தருவதாகும்; பாத்து உணவு - பகுத்து உண்ணுதல், இல்லார் உழை-இல்லாதவர்களிடத்தில், சென்று-போய், உணவு-உண்ணுதல், இன்னா-துன்பந்தருவதாகும்; மூத்த இடத்து-(வயது) முதிர்ந்த காலத்தில், பிணி-நோய் உண்டாதல், இன்னா-துன்பந்தருவதாகும்; ஆங்கு-அவ்வாறே, ஓத்து இலா-வேதத்தை ஓதுதல் இல்லாத, பார்ப்பான் உரை-பார்ப்பானுடைய சொற்களானவை, இன்னா - துன்பந்தருவனவாகும்.

யானையின் மன்னரைக் காண்ட னனியின்னா ;
ஊனைத்தின் றூனைப் பெருக்குதன் முன்னின்னா ;
தேனெய் புளிப்பிற் சுவையின்னா ; இன்னா
கான்யா றிடையிட்ட வூர். 22

(ப-ரை.) யானை இல்-யானைப்படை இல்லாத, மன்னரை-அரசர்களை, காண்டல் - பார்த்தல், நனி இன்னா - மிகவுந் துன்பந் தருவதாகும்; ஊனைத்தின்று-(பிறிதோர் உயிரின்) ஊனை உண்டு, ஊனை-(தன்) ஊனை, பெருக்குதல் - வளர்த்தல், முன் இன்னா - மிகவுந் துன்

பந் தருவதாகும்; தேன் நெய் - தேனும் நெய்யும், புளிப்பின்-புளித் துப்போகுமானல், சுவை-(அவற்றின்)சுவை, இன்ஞ-துன்பந் தருவ தாகும்; கான்யாறு - காட்டாற்றின், இடையிட்ட - இடையிலே உண்டாக்கிய, ஊர் - ஊரானது, இன்ஞ-துன்பந்தருவதாகும்.

சிறையில்லா மூதூரின் வாயில்காப் பின்ஞ;
துறையிருந் தாடை கழுவுத லின்ஞ;
அறைபறை யாயவர் சொல்லின்ஞ; இன்ஞ
நிறையில்லான் கொண்ட தவம். 23

(ப-ரை.) சிறை இல்-மதில் இல்லாத, மூதூரின்-பழைமையாகிய ஊரினது, வாயில் காப்பு-வாயிலைக் காத்தல், இன்ஞ - துன்பந்தருவ தாகும்; துறை இருந்து - (குள முதலியவற்றின்) துறைகளில் இருந் து, ஆடை கழுவுதல் - ஆடையைத் தோய்த்தல், இன்ஞ - துன்பந் தருவதாகும்; அறை - சப்திக்கின்ற, பறை ஆயவர் - பறையைப்போல இரைந்து பேசுகின்றவர்களுடைய, சொல்-சொற்கள், இன்ஞ-துன் பந்தருவனவாகும்; நிறை இல்லான் - (பொறிகளைத் தடுத்து) நிறுத் துந்தன்மை இல்லாதவன், கொண்ட - மேற்கொண்ட, தவம் - தவ மானது, இன்ஞ-துன்பந்தருவதாகும்.

ஏமமில் மூதூ ரிருத்தன் மிகவின்ஞ;
தீமை யுடையா ரயலிருத்த னன்கின்ஞ;
காம மூதிரி னுயிர்க்கின்ஞ; ஆங்கின்ஞ
யாமென் பவரோடு நட்பு. 24

(ப-ரை.) ஏமம் இல் - காவல் இல்லாத, மூதூர்-பழைய ஊரிலே, இருத்தல்-வசித்தல், மிக இன்ஞ-மிகவுந் துன்பந் தருவதாகும்; தீமை உடையார் - தீமையாகிய செயகை யுடையவாது; அயல் இருத்தல்-பக்கத்திலே இருத்தல, நன்கு இன்ஞ - மிகவும் துன்பந்தருவதாகும்; காமம் மூதிரின் - காமம் மிகுந்தால், உயிர்க்கு-ஆன்மாவுக்கு, இன்ஞ-துன்பந்தருவதாகும்; ஆங்கு-அவ்வாறே, யாம் என்பவரோடு - (சிறப் புடையோம்) யாங்கள் என்று (செருக்கி) இருப்பவர்களோடு (கொள் ளும்), நட்பு-சிநேகம், இன்ஞ-துன்பந்தருவதாகும்.

நட்டா ரிடுக்கண்கள் காண்ட னினியின்ஞ;
ஒட்டார் பெருமிதங் காண்டல் பெரிதின்ஞ;
கட்டில்லா மூதூ ருறையின்ஞ; ஆங்கின்ஞ
நட்பு கவற்றிஞற் சூது. 25

(ப-ரை.) நட்டார்-நட்புக் கொண்டவர்களுடைய, இடுக்கண்கள்-துன்பங்களை, காண்டல்-பார்த்தல், நனி இன்னா - மிகவுந் துன்பந் தருவதாகும்; ஒட்டார்-பகைவர்களது, பெருமிதம்-செருக்கை, காண்டல்-பார்த்தல், பெரிது இன்னா-மிகவுந் துன்பந் தருவதாகும்; கட்டு இல்லா - (ஒற்றுமையோடுகூடிய) கட்டுப்பாடு இல்லாத, மூதூர்-பழைய ஊரிலே, உறை-வசித்தல், இன்னா - துன்பந் தருவதாகும்; ஆங்கு-அவ்வாறே, நட்ட - நடப்பட்டுள்ள, கவற்றினால் - கவற்றைக் கொண்டு ஆடுகின்ற, சூது - சூதாட்டம், இன்னா - துன்பந் தருவதாகும்.

**பெரியாரோ டியாத்த தொடர்விடுத லின்னா ;**
**அரியவை செய்து மெனவுரைத்த லின்னா ;**
**பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா ; இன்னா**
**பெரியார்க்குத் தீய செயல்.** 26

(ப-ரை.) பெரியாரோடு-பெரியவர்களுடன், யாத்த - கொண்ட தொடர்-தொடர்ச்சியை, விடுதல்-விடுவது, இன்னா - துன்பந்தருவதாகும்; அரியவை-செய்தற்கரிய காரியங்களை, செய்தும்-செய்து முடிப்போம், என உரைத்தல்-என்று சொல்லுதல், இன்னா-துன்பந் தருவதாகும் ; பரியார்க்கு-(தம்மிடத்தில்) அன்புகொள்ளாதவர்களுக்கு, தாம் உற்ற-தாம் அடைந்த துன்பங்களை, கூற்று-சொல்லுதல், இன்னா-துன்பந் தருவதாகும்; பெரியார்க்கு-(கல்வி கேள்விகளாற் சிறந்த) பெரியோர்களுக்கு; தீய செயல்-தீமையான காரியங்களைச் செய்தல், இன்னா-துன்பந் தருவதாகும்.

**பெருமை யுடையாரைப் பீடழித்த லின்னா ;**
**கிழமை யுடையார்க் களைந்திடுத லின்னா ;**
**வளமை யிலாளர் வனப்பின்னா ; இன்னா**
**இளமையுண் மூப்புப் புகல்.** 27

(ப-ரை.) பெருமை உடையாரை-பெருமையுடையவர்களை, பீடு அழித்தல்-பெருமைகெடச் செய்தல், இன்னா-துன்பந்தருவதாகும்; கிழமையுடையார் - (தம்மோடு) உரிமையுடையவர்களை, களைந்திடுதல்-நீக்கிவிடுதல், இன்னா-துன்பந்தருவதாகும்; வளமை-செல்வம், இலாளர்-இல்லாதவர்களுடைய, வனப்பு-அழகு, இன்னா - துன்பந் தருவதாகும்; இளமையில் - இளம்பருவத்தில், மூப்பு-முதுமைப்பருவத்துக்குரியதன்மைகள், புகல்-உண்டாதல், இன்னா-துன்பந்தருவதாகும்.

கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்னா;
வல்லாதான் சொல்லு முரையின் பயனின்னா;
இல்லார்வாய்ச் சொல்லி னயமின்னா; ஆங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல். 28

(ப-ரை.) கல்லாதான்-(நடத்தவேண்டிய முறைகளைக்) கற்காதவன், ஊரும்-ஏறிச்செலுத்தும், கலி-கனைத்தலையுடைய, மா-குதிரை, பரிப்பு-(அவனைச்) சுமந்துசெல்லுதல், இன்னா-துன்பந்தருவதாகும்; வல்லாதான் - (நூற்களைக்) கற்றறியாதவன், சொல்லும்-சொல்லுகின்ற, உரையின் பயன்-சொல்லினது பொருள், இன்னா-துன்பந்தருவதாகும்; இல்லார்-(செல்வம்) இல்லாதவர்களுடைய, வாய்ச்சொல்லின்-வாயிலிருந்து வரும் சொல்லினது, நயம்-நயமானது, இன்னா-துன்பந்தருவதாகும்; ஆங்கு-அவ்வாறே, கல்லாதான்-(கற்கவேண்டிய நூற்களைக்)கற்காதவன், கோட்டி கொளல்-(கற்றவர்கள்கூடியுள்ள)சபையிற்சென்றிருத்தல், இன்னா-துன்பந்தருவதாகும்.

குறியறியான் மாநாக மாட்டுவித்த லின்னா(து);
அறிவறியா னீரின்கட் பாய்ந்தாட லின்னா;
அறிவறியா மக்கட் பெறலின்னா; இன்னா
செறிவிலான் கேட்ட மறை. 29

(ப-ரை.) குறி அறியான்-(பாம்பாட்டுதற்குரிய மந்திர முதலியவற்றின்) முறைகளை அறியாதவன், மா நாகம் - பெரிய பாம்புகளை, ஆட்டுவித்தல்-ஆடச்செய்தல், இன்னாது-துன்பந்தருவதாகும்; அறிவு -(நீரில் நீந்த) அறிதற்குறியனவற்றை,அறியான்-அறியாதவன், நீரின் கண் - நீரில் (குளமுதலியவற்றில்), பாய்ந்து-, ஆடல்-குதித்துவிளையாடுதல், இன்னா-துன்பந்தருவதாகும்; அறிவு-(மாந்தர்களின் வாழ்க்கைக்கு) அறிதற்குரியனவற்றை, அறியா-அறியமாட்டாத, மக்கள்-பிள்ளைகளை, பெறல்-பெறுதல்,இன்னா-துன்பந்தருவதாகும்; செறிவு இலான்-(நா) அடக்கம் இல்லாதவன், கேட்டமறை-கேட்டஇரகசியச் செய்திகள்,இன்னா-(அவனுக்கும் பிறர்க்குந்) துன்பந்தருவனவாகும்.

நெடுமர நீள்கோட் டுயர்பாய்த லின்னா;
கடுஞ்சின வேழத் தெதிர்சேற லின்னா;
ஒடுங்கி யரவுறையு மில்லின்னா; இன்னா
கடும்புலி வாழு மதர். 30

(ப-ரை.) நெடுமரம்-நெடியமரத்தினது, நீள் கோட்டு - நீண்ட கிளையின், உயர்-உயரத்திலிருந்து,பாய்தல்-கிழே குதித்தல், இன்னா-

துன்பந்தருவதாகும்; கடும் சினம்-மிக்க கோபத்தினையுடைய, வேழத்து எதிர்-யானைக்கு எதிரில், சேறல்-செல்லுதல், இன்னா-துன்பந் தருவதாகும்; அரவு-பாம்பு, ஒடுங்கி உறையும்-பதுங்கி வசிக்கின்ற, இல்-வீடானது, இன்னா-துன்பந் தருவதாம்; கடும்புலி-கொடியபுலிகள், வாழும் அதர்-வசிக்கும் வழியானது, இன்னா - துன்பந்தருவதாகும்.

**பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல்பெரிதின்னா ;**
**எண்ணறியா மாந்த ரொழுக்குநாட் கூற்றின்னா ;**
**மண்ணின் முழவி னொலியின்னா ; ஆங்கின்னா**
**தண்மையி லாளர் பகை. 31**

(ப-ரை.) பண் அமையா-சுருதிகூடாத; யாழின் கீழ்- யாழின் கீழிருந்து, பாடல்-பாடுதல், பெரிது இன்னா-மிகவுந் துன்பந்தருவதாகும்; எண் அறியா- கணக்கினை அறியாத, மாந்தர்-மனிதர்கள், ஒழுக்கு - நடத்துகின்ற, நாள் கூற்று - நாட்களின் கூறுபாடுகள், இன்னா-துன்பந்தருவனவாம்; மண் இல்-(மார்ச்சனை)மண் இல்லாத, முழவின்-மத்தளத்தினது, ஒலி-ஒசை, இன்னா - துன்பந்தருவதாகும்; ஆங்கு-அவ்வாறே, தண்மை இலாளர் - தண்ணியகுணம் இல்லாதவர்களுடைய, பகை-பகையானது, இன்னா-துன்பந்தருவதாகும்.

**தன்னைத்தான் போற்றா தொழுகுத னன்கின்னா ;**
**முன்னை யுரையார் புறமொழிக் கூற்றின்னா ;**
**நன்மையி லாளர் தொடர்பின்னா ; ஆங்கின்னா**
**தொன்மை யுடையார் கெடல். 32**

(ப-ரை.) தன்னைத்தான் - (ஒருவன்) தன்னைத்தானே, போற்றாது-காத்துக்கொள்ளாது, ஒழுகுதல்- நடத்தல், நன்கு இன்னா-மிகவுந் துன்பந்தருவதாகும்; முன்னை உரையார்-(ஒருவர்க்கு) முன்னே சொல்லாமல், புறமொழிக்கூற்று - (அவரைப்பற்றி அவர்க்குப் பின்னே சொல்லும்) சொல்லினது கூறுபாடு, இன்னா-துன்பந்தருவதாகும்; நன்மை இலாளர் - நற்குணமில்லாதவர்களுடைய, தொடர்பு - நட்பு, இன்னா - துன்பந்தருவதாகும்; ஆங்கு-அவ்வாறே, தொன்மை உடையார் - பழமையாகிய செல்வர்கள், கெடல் - (அச்செல்வம்) கெடுதல், இன்னா-துன்பந்தருவதாகும்.

**கள்ளுண்பான் கூறுங் கருமப் பொருளின்னா ;**
**முள்ளுடைக் காட்டி னடத்த னனியின்னா ;**
**வெள்ளம் படுமாக் கொலையின்னா ; ஆங்கின்னா**
**கள்ள மனத்தார் தொடர்பு. 33**

(ப-ரை.) கள் உண்பான்-கள்ளைக் குடிப்பான் (கட்குடியன்), கூறும் - சொல்லுகின்ற, கருமப்பொருள் - காரியத்தினது பயன், இன்னா-துன்பந்தருவதாகும்; முள் உடைய-முள்ளை உடைய, காட்டில் நடத்தல்-காட்டிலே நடத்தல், நனி இன்னா-மிகவுந் துன்பந் தருவதாகும்; வெள்ளம்படு - வெள்ளத்தில் அகப்பட்ட, மா-மிருகத்தை, கொலை-கொல்லுதல், இன்னா-துன்பந்தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, கள்ளம் மனத்தார் - வஞ்சனையையுடைய மனத்தையுடையவர்களது, தொடர்பு-நட்பு, இன்னா-துன்பந்தருவதாகும்.

ஒழுக்க மிலாளர்க் குறவுரைத்த லின்னா ;
இழித்தகு நூலும் விழையாதார்க் கின்னா ;
விழித்த தொழிலவர் நட்பின்னா ; இன்னா
கழிப்புலாய் மண்டிலங் கொட்பு. 34

(ப-ரை.) ஒழுக்கம் இலாளர்க்கு - நல்லொழுக்கம் இல்லாதவர்களுக்கு, உறவு-(அவர்களோடு தமக்குற்ற) தொடர்பை, உரைத்தல் - சொல்லுதல், இன்னா-துன்பந்தருவதாகும்; இழித்தகு நூலும்-இழித்தற்கேற்ற (தகுதியல்லாத பொருள்களையுடைய) நூற்களும், விழையாதார்க்கு - விரும்பாதவர்களுக்கு, இன்னா - துன்பந்தருவதாகும்; இழித்த தொழிலவர் - இழிந்த தொழிலை யுடையவர்களுடைய, நட்பு-சிநேகம், இன்னா-துன்பந்தருவதாகும்; மாண்டிலம்-குதிரை, கழிப்பு உலாய்-வெறுத்தற்குறிய விதமாக உலவி, கொட்பு-சுழலுதல், இன்னா - துன்பந்தருவதாகும்.

எழிலி யுறை நீங்கி னீண்டையார்க் கின்னா ;
குழலி னினிய மரத்தோசை நன்கின்னா ;
குழவிக ளுற்ற பிணியின்னா ; இன்னா
வழகுடையான் பேதை யெனல். 35

(ப-ரை.) எழிலி - மேகமானது, உறை நீங்கின் - மழையைச் சொரிதலை நீங்குமானால், ஈண்டையார்க்கு - இவ்வுலகத்திலுள்ளவர்களுக்கு, இன்னா - (அது) துன்பந் தருவதாகும்; குழலின் இனிய-புல்லாங்குழலைப்போலும் இனிய, மரத்து ஓசை-மரத்தினது ஓசை, நன்கு இன்னா-மிகவும் துன்பந் தருவதாகும்; குழவிகள் உற்ற-குழந்தைகளை அடைந்த, பிணி-நோயானது, இனனா-துன்பந்தருவதாகும்; அழகு உடையான் - அழகினை உடையவன், பேதை எனல்-(கல்வி) அறிவில்லாதவன் என்று சொல்லப்படுதல், இன்னா - துன்பந்தருவதாகும்.

MAHAMAHOPADHYAYA
DR U V SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS